RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s238

# இமையத்தின் கோவேறு கழுதைகள் புதினத்தில் தலித் வாழ்வியல்

**க. அபிலாஷா** [அ, *]

[அ] ஆங்கிலத்துறை, ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா.

# Representation of Dalit life in Imaiyam's Koveru Kazhuthaigal

**K. Abilasha** [a, *]

[a] Department of English, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur–626203, Tamil Nadu, India

* Corresponding Author: abilasha@srnmcollege.ac.in

Received: 01-04-2021
Revised: 19-01-2022
Accepted: 21-01-2022
Published: 28-02-2022

Check for updates

## ABSTRACT

Indian society and its collective consciousness are polluted with casteism. After thousands of years of suppression and exploitation, the margin came to the centre and the other side of the history was revealed. Dalit literature gave insights about the dalit life which otherwise is never written in a dalit's view. "Writing about Dalits by Dalit writers with a Dalit Consciousness" says Sharan Kumar Limbale about Dalit literature in his book Towards an Aesthetic of Dalit Literature. Having this as base, this paper proposes to study Imaiyam's Koveru Kazhuthaigal from dalit literary perspective and appreciate the life represented in it. The novel is set in an Indian village and the protagonists belong to the washerman community which is considered as the lowest of the lower in caste hierarchy practiced in Tamilnadu. The hypothesis is to question the collective consciousness regarding the inhuman casteist practices and demand change in the life of the oppressed and in the conscience of the oppressor. Famous Tamil Dalit writer Bama proposes eduation as a solution for casteism in her semi autobiographial text *Karukku*; Imaiyam shows change of place from rural to urban setup as a solution for better treatment. The real solution demands change from the oppressor too. Limitations of this research is the huge volume of the possible solution to the problem represented and the concrete presence of casteism in Indian psyche.

**Keywords:** Dalit Literature, Koveru Kazhuthaigal, Caste Hierarchy, Dalit Literary Tradition and Aesthetics.

## முன்னுரை

"தலித்களைப் பற்றி தலித் எழுத்தாளர்களால் தலித் உணர்வோடு எழுதப்படுவதே தலித் இலக்கியம்" என்று வரையறுக்கிறார் சரண் குமார் லிம்பேல். இலக்கியங்களில் காணப்படும் தலித் வாழ்வியலின் உண்மைத்தன்மை மேற்கண்ட வரையறைக்குள் அடங்கும் இலக்கியங்களில் மட்டுமே சாத்தியமாகிறது. ஆ. சிவசுப்பிரமணியன் தன்னுடைய 'தலித் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர் நிலையும் மேம்பாடும்' என்ற கட்டுரையில், "கைவினைஞர்கள், உழவர்கள், மீனவர், ஆயர் ஆகியோரின் வாழ்வியல் குறித்த செய்திகள் பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவாகியுள்ளன என்றாலும் அவர்களின் வாழ்வியல் சிக்கல்கள் முழுமையாகப் பதிவாகவில்லை என்றுதான் கூறவேண்டியுள்ளது (Poornachandran, 2004). முல்க்ராஜ் ஆனந்தின் 'பக்கா'வோ, தகழி சிவசங்கரன் பிள்ளையின் 'சுடலமுத்துவோ', பாமாவின் கதாபாத்திரங்களுக்கோ, இமையத்தின் 'சவரி'க்கோ மிகவும் அந்நியமானவர்கள். தலித் என்னும் வார்த்தையின் 'மண்ணின் மைந்தன்" எனும் பொருளுக்கேற்ப தனித்த அழகியலோடு இயைந்த வாழ்வியல் கூறுகள் தலித் இலக்கியத்தின் சிறப்பியல்பாகும். புரையோடிப் புற்றாகி வளர்ந்திருக்கும்

சாதிக் கொடுமையின் பெருஞ்சான்றுமாகும். அவ்வகையில் தொல் தமிழ்நாட்டின் பிற்காலத்திய கேடுகால அவலமான சாதி கட்டமைப்பில் மறுக்கப்பட்ட உரிமைகள், மறைக்கப்பட்ட உண்மைகள் அயோத்திதாச பண்டிதர் முதலாக பாமா, சிவகாமி, அரங்கமல்லிகா, மீனா கந்தசாமி, இமையம் வரையிலான ஆளுமைகளால் எழுத்துகளாகப் பதிவு செய்யப்படுகிறது. தேசிய அளவில் மராத்திய தலித் இலக்கியம் கெய்ல் ஓம்வேத், அர்ஜீன் டாங்லே, லக்ஷமண் கெய்க்வாட், லக்ஷ்மண் மானே, ஓம் பிரகாஷ் வால்மீகி, சரண்குமார் லிம்பேல் போன்ற எழுத்தாளர்களால் தொடர்ந்து பெரும் கவனம் பெற்று வருகிறது. இச்சூழலில் தமிழ் இலக்கியத்தில் தலித் வாழ்வியலை ஆய்வு செய்யும் நோக்கில் இமையத்தின் 'கோவேறு கழுதைகள்' புதினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சமூக அவலமாகத் தொடரும் சாதி ஏற்றத்தாழ்வுகளை தனி ஒரு மனிதனுக்கோ, குடும்பத்துக்கோ ஏற்பட்ட தனிப்பட்ட அவமரியாதையாகக் கருத இயலாது. சாதி கொடுக்கும் உரிமையாகவே கருத முடியும். இவ்வாய்வு இமையத்தின் 'கோவேறு கழுதைகள்' புதினத்தில் சவுரியின் குடும்பத்தின் நிகழ்வுகள் வழியாக வெளிப்படும் சாதிய அடக்குமுறைகளை, தலித் வாழ்வியலைப் பதிவு செய்கிறது. அவ்வாறு பதிவு செய்வதன் வாயிலாக சமூகத்தின் கூட்டு மனசாட்சியைக் கேள்வியெழுப்புகிறது. இப்பிரச்சனைக்குத் தீர்வாக இமையத்தின் கதையில் காணப்படும் 'நகர்ப்புறம் நகர்தல்' அமையுமா? 'கருக்கு" வில் பாமா முன்வைக்கும் 'கல்வி பெறுதல்' உதவுமா? என்பவை ஆய்வு முடிவுகள். சமூகத்தின் எல்லா மட்டங்களிலும், தனிமனித மனத்திலும் சாதியத்தின் வேர்களையப்படுதலின் சாத்தியக் கூறுகள் இவ்வாய்வின் எல்லைகளாகும்.

## தலித் வாழ்வியல்

பதிவு செய்யப்படாத நெடிய வரலாறு என தலித் வாழ்வியலைக் கூறலாம். மகாத்மா ஜோதிராவ் பூலே, அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், அண்ணல் அம்பேத்கர், பெரியார் போன்ற பேரறிஞர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் அவலங்களைப் பதிவு செய்த பின்னரே பேசாப் பொருளாக இருந்த கொடிய வழக்கங்கள் பேசு பொருளானது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எத்தகைய அரசியல் காரணங்களால் தமிழ்க் குடியினர் ஒடுக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டனர் என்பதையும் அயோத்திதாசர் விளக்குகிறார். எனினும் ஒடுக்கப்பட்ட பின்னர் இந்திய நாடு முழுவதுமுள்ள தலித் மக்களின் நிலையை ஒத்ததே தமிழ் தலித் மக்களின் நிலையும். சேரிகளும், காலனிகளும் பேசு பொருளான போது, அவற்றின் வாழ்வியலும், மக்களும் கதை மாந்தர்களாயினர். வசைச் சொற்களும், கொச்சை மொழியும், இட்டுக்கட்டி பாடப்படும் பாடல்களும், பன்றி, மாடு, ஆடு போன்றவற்றின் இறைச்சியுணவும், தைரியமான, வேலைக்குச் செல்லும் பொருளாதார விடுதலை பெற்ற பெண்களும் இத்தலித் வாழ்வியலின் அழகியல் கூறுகளாவர். இமையத்தின் புனைவில் வண்ணான் சமூகத்தின் பழக்க வழக்கங்கள், உணவு முறைகள் போன்றவை கதையின் போக்கில் வெளிப்படுகின்றன. மாட்டிறைச்சியும், பன்றியிறைச்சியும் கொண்டாட்டங்களாகின்றன. அந்தோணியாரும், மாரியம்மாளும் பேதமின்றி அருளுகிறார்கள்; அருள மறுக்கிறார்கள். சாதியக் கோட்பாடு என்பதே பிறப்பினால் மனிதனை வகைமைப்படுத்தும் வர்ணாசிரம சனாதன கருத்தியல். மேலைச் சமயங்களான கிருத்துவத்திலும், இசுலாமியத்திலும் சாதி இல்லை எனினும் இந்திய கிருத்தவர்கள் சாதியைப் பின்பற்றுபவர்களாகவே உள்ளனர் என்பதை இப்புதினத்திலும், பாமாவின் *கருக்கு* புதினத்திலும் காணலாம். இநதிய ஒன்றியத்தில் 'சாதி'என்பது மதத்தைத் தாண்டிய சமூக வாழ்வியலாக இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இதன்மூலம் கிருத்துவ சமயத்தில் சாதிக்கு இடமில்லை என்பதன் இந்திய நிதர்சனம் முகத்திலறைகிறது (Mukherjee, 2004).

## இமையத்தின் கோவேறு கழுதைகளின் கதை

இக்கதை ஊரின் எல்லையிலிருக்கும் சேரியைப் பற்றியதல்ல, சேரியும் ஒதுக்கி வைக்கும் மக்களைப் பற்றியது. மேல் சாதியினராகக் கருதப்படுவோரின் வாழ்விடம் ஊர்; அவர்களிலும் கீழ்சாதியினராகக் கருதப்படுவோரின் வாழிடம் சேரி. ஊருக்கு சேரி தீட்டு. சேரியிலும் சேர்க்கப்படாத

சக்கிலியர், வண்ணான் சமூகங்களில் வண்ணான் சமூகத்தைச் சேர்ந்த சவுரி, ஆரோக்கியம் இணையரின் கதை இது. சவுரி பறையர்களின் 'குடிமகன்" எனப்படும் வண்ணான். வீட்டில் பிறப்பு, பெரிய மனுஷியாவது, இறப்பு என அனைத்து விசேடங்களிலும் வண்ணானின் பங்கு உண்டு. சவுரியும், ஆரோக்கியமும் அவர்கள் உரிமைக் குடும்பங்களின் வேலைகளைப் பார்ப்பது, அவர்களின் துணிகளைத் துவைப்பது, இரவு வீடு, வீடாகச் சென்று இராச்சோறு வாங்கித் தின்பது என வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஜோசப், மேரி, பீட்டர் என மூன்று பிள்ளைகள். ஜோசப்பின் மனைவி சகாயம் சின்ன சேலத்தைச் சேர்ந்தவள், நகரத்தில் வளர்ந்ததால் அடிமைத்தனத்தின் நீட்சியான காலில் விழுதல், வீடு வீடாகச் சென்று சோறு வாங்குதல் போன்றவைகளைச் செய்ய மறுத்து தன் கணவனையும் நகரத்திற்கு கூட்டிச் செல்கிறாள். மேரிக்குத் திருமணமாகி கைக்குழந்தையுடன் இருக்கையில் பாம்பு கடித்து அவள் கணவன் சாக, மீண்டும் பெற்றோருடன் வாழ்கிறாள். பீட்டர் இச்சூழலில் வாழ விருப்பமின்றி சென்னைக்கு ஓடிப் போகிறான். கண் பார்வை மங்கி வரும் நிலையில் மகள் விதவையானதையும், மாறிவரும் நாகரிங்களால் தங்கள் பிழைப்பு போனதையும் ஆரோக்கியம் நினைத்துக் கொண்டே துணி வெளுக்க நடப்பதோடு கதை முடிகிறது (Imayam, 1994).

## சாதியின் பெயரால் சவுரி குடும்பத்தினர் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள்

பீட்டர் தன் நண்பர்களால் 'ராச்சோறு' என்று கிண்டல் செய்யப்படுவது, சிறு குழந்தைகள் கூட ஆரோக்கியத்தை 'வண்ணாத்தி மவள' என்றழைப்பது, சாவு வீட்டில் மூங்கில் பாடை கட்டி, வாய்க்கரிசி போட வைத்து சடங்குகளனைத்தும் செய்த பின் ராமசாமியிடம் சவுரியும், ஆரோக்கியமும் கெஞ்சுவதும், தன் உரிமையான பன்றி தலைக்காக கெஞ்சுவதும், காலில் விழுவதும், இழிசொல் கேட்பதுமே தினப்படி நடைமுறையாக உள்ளது. "பீட்டரைத் தவிர மற்ற எல்லாரும் பிசைந்து, பிசைந்து மணலை அள்ளிச் சாப்பிட்டுவிட்டு, இது காக்காய்க்கும், இது நாய்க்கு, இது வண்ணாரப் பெயலுக்கு என்று ஒதுக்கி வைத்த மணலை பீட்டர் கலைத்த போதுதான் சண்டை வந்தது" (Imayam, 1994). "இப்போதும் சின்னப்பிள்ளைகள் கூட 'வண்ணாத்தி மவள' என்று தான் கூப்பிடுகிறார்கள். சிரித்துக் கொண்டே ஆரோக்கியம், 'என்னா விசயம்" என்பாள்" (Imayam, 1994). உணவேதும் உண்ணாமல், மூங்கில் வெட்டி, பாடை கட்டிய சவுரி பசி மயக்கத்தில் சோளச் சோறு கரைத்துக் குடித்ததை 'ஆவட்டும்டா, ஆவட்டும். முண்டப்பயல, சோறு தண்ணி குடிக்கிற நேரமாடா இது?" என்று ராமசாமி அதட்டுவதன் காரணமும் சாதியே. கதை முழுவதும் ராமசாமி 'முண்டபயலே" என்று மட்டுமே கூப்பிடுகிறார். சடையன் துணி எடுக்க வந்த மேரியை வன்புணர்வு செய்வதும், மேரி எதிர்த்துக் கதற, போராட இயலாமல் அழுது, வெதும்புவதையும் இமையம் உண்மைக்கு நெருக்கமாகக் கூறியுள்ளார்.

## பொருளாதார சார்பு நிலை

சவுரியின் குடும்பம் தினமும் காலனி மக்களின் துணிமணிகளை தலையில் சேகரித்து தொரப்பாட்டிற்குச் சென்று துவைத்து, காய வைத்து, மாலையில் ஒவ்வொரு வீட்டிலும் கொடுக்க வேண்டும். இதற்காக இரவு ஒவ்வொரு வீட்டிலும், அவர்களுக்கு சோறு, குழம்பு என்று கொடுப்பர். சவுரி குடும்பத்தினர் வீடுவீடாகச் சென்று அச்சோற்றை வாங்கி பசியாற வேண்டும். 'பலவட்ற" பலபட்டறை" என்று வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படும் சொல் உண்மையில் 'பலபட்டறைச் சோறு" என்று குறிக்கிறது. அறுவடைக் காலங்களில் தானியங்களை களம் தூற்றி, தானியங்களைக் கூலியாகப் பெறுவர். கிழிந்த துணிகளைத் தைத்துக் கொடுத்து, அதற்குக் கூலியாக குழம்புச் சாமான் பெறுவர். பேறு காலம் பார்ப்பதும், மாரில் பால் கட்டினால் பக்குவம் பார்ப்பதும் வண்ணாத்தியின் கடமை. அதில் பயன்பெறுவோர் தானியமும், குழம்புச் சாமான்களும் கொடுப்பர். பெண் வயதுக்கு வந்து விட்டால் அவர்களின் தீட்டுத் துணியைத் துவைப்

பதும், பேறுகாலத் தீட்டுத் துணிகளைத் துவைப்பதும் ஆரோக்கியமே. அதற்காக புதுத்துணி எடுத்துக் கொடுப்பர். இது போக பஞ்ச காலத்தில் சேமித்து வைத்த தானியங்களை விற்றும் காசு பார்ப்பர். இவ்வளவு வேலைகள் செய்தாலும் வேலைக்கான கூலியைக் கெஞ்சியும், காலில் விழுந்தும் பாதியாய் மடிந்து வணங்கியும் வாங்க வேண்டியுள்ளது. வரையறுக்கப்பட்ட வேலை நேரமின்றி

உழைப்பதும், சரியான கூலி முறைப்படுத்தப்படாததும், திறனுக்காகவோ, விருப்பத்துக்காகவோ அன்றி குறிப்பிட்ட சாதியில் பிறந்த ஒரே காரணத்தினால் இழிபிறவியாக நடத்தப்படுவது, உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாவது, சுகாதாரமற்ற வேலைகள் பார்ப்பது பொருளாதார ரீதியில் தலித்துகளை ஏழைகளாகவும், நிலமற்றவர்களாகவும், சார்ந்து வாழ்பவர்களாகவும் வைத்துள்ளது.

## வீடும், சுற்றுப்புறமும்

பொதுவாக இந்திய கிராமங்களில் ஆதிக்கசாதிகள் தாழ்த்தப்பட்டவர்கள் சேரியிலும், அதனினும் ஒடுக்கப்பட்டவர்கள் சேரிக்கும் வெளியில தங்க வைக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி சவுரியின் குடும்பம் பறையர்களின் குடியிருப்பிற்கு வெளியில் சக்கிலியரான பெரியானின் வீட்டிற்கும் அடுத்து குடிசையில் வாழ்கிறது. சேறும், சகதியும் நிறைந்த ஒற்றையடிப்பாதை, பன்றிகளும் நாய்களும் மேயும் கருவேலங்காடு, சேரிப் பெண்கள் கொல்லைக்கு ஒதுங்கும் இடத்தின் தான் சவுரியின் வீடு உள்ளது. மழைக் காலத்தில் முழங்காலளவு சேறு நிறைந்த அவ்விடத்தில் அக்குடும்பம் வாழ்கிறது.

## உணவுப் பழக்கங்கள்

கஞ்சி, வறுத்த மிளகாய், வரகு, சோளம் போன்ற தானியங்களில் செய்த கஞ்சி, இராச்சோறாக பல வீட்டு உணவுகள் கலந்த சோறு, கூட்டாஞ்சோறு, பன்றி, மாடு போன்ற இறைச்சிகள் ஆகியவை இம்மக்களின் உணவு. சவுரி பன்றியின் குடலையும், மாட்டின் குடலையும் சுத்தம் செய்வதும், மேரி அவற்றைப் பக்குவமாகக் குழம்பு வைப்பதையும் ரசிக்குமாறு இமையம் படைத்துள்ளார்.

## பெண்ணுலகம்

இந்திய ஆதிக்க சமூகத்தைப் போலன்றி பெண்ணால் ஆளப்படுவதாகவே தலித் சமூக வாழ்வு இருக்கிறது. பொதுப் பெண்ணியத்தில் தலித் பெண்ணியம் அடங்காது என்று பாமா கூறுவதன் காரணமும் இதுவே. வீட்டை விட்டு வெளியில் சென்று வேலை பார்ப்பது, சம்பாதிப்பதே பொதுப் பெண்ணியத்தின் குறிக்கோளாக இருந்தது. ஆனால் ஆணை விட அதிகமாக உழைக்கும் தலித் பெண்களின் பிரச்சனை வேலைக்குச் செல்வதோ, சம்பளம் வாங்குவதோ அல்ல, ஆதிக்கசாதி ஆண்களால் பாலியல் சீண்டல்களுக்குள்ளாவதும், குடிகார கணவன்களிடமிருந்து தப்பிப்பதுமேயாகும். ஆரோக்கியம் தான் சவுரியையும், குடும்பத்தையும் வழி நடத்துகிறாள். மேரி சடையனால் வன்புணர்வு செய்யப்பட்டதும் இவ்வலத்தைக் காட்டுகின்றன. மேரி தெருவில் நடந்து வந்தது காற்றில் நடப்பது போல் இருந்தது. கண்கள், சவத்தினுடையதைப் போலிருந்தன. கண்களுக்குள் மரணம் நிறைந்திருந்தது" என்று மேரியின் நிலையை இமையம் விவரிக்கிறார். எதுவும் செய்ய முடியாத நிலையை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது (Imayam, 1994).

## முடிவுரை

இருபத்தியோராம் நூற்றாண்டிலும் இனவெறி, சாதிவெறி போன்றவை தவிர்க்க முடியாத சக்திகளாக வளர்ந்திருப்பதை மறுக்கவியலாது. இவற்றை ஆவணப்படுத்துவதும், விழிப்புணர்வூட்டுவதுமே இப்போதைய தீர்வு. சட்டங்கள் இயற்றப்பட்டு உரிமைகள் நிறுவப்படினும் இங்கு ரோஹித் வெமுலாக்கள் வாழ இடமில்லை என்பதே கள யதார்த்தம். பெரும் மாற்றம் மனதளவில் ஏற்பட வேண்டும் என்பதே இவ்வாய்வின் எல்லை. சமூகம், பொருளாதாரம், வீடு, உணவு, வேலை என பல்வேறு கோணங்களில் சவுரி குடும்பத்தின் கதையை ஆராய்ந்துள்ளது இக்கட்டுரை. உள்ளதை உள்ளவாறே கூறும் இப்புதினம் சாதி புரையோடிய இந்தியக் கூட்டு மனசாட்சியைக் கேள்வி கேட்கிறது என்பதே இதன் முடிவு.

## References

Imayam, (1994) Koveru Kazhuthaigal, Crea Publications, Chennai, India.

Mukherjee, Alok., (2004) Towards an Aesthetic of Dalit Literature, Orient Longman Private Limited, New Delhi, India.

Poornachandran, K., (2004) Improving the status of the oppressed in Dalit literature, Agaram, Thanjavur, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License